பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

19 03 2025 6 45
புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள் -

1. சர்வதேச விண்வெளி மையத்தில் ஒன்பது மாதங்களுக்கும் மேலாக தங்கி இருந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட நான்கு விண்வெளி வீரர்கள் இன்று அதிகாலை பத்திரமாக பூமிக்கு திரும்பினர்.
2. உலக நாடுகளில் இந்திய கலாச்சாரம் குறித்த ஆர்வம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தில் ஆளும் திமுக அரசு முறைகேடுகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே தொகுதி மறுவரையறை பிரச்சினையை எழுப்பி வருவதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.
4. தமிழகத்திற்கு மாநில மற்றும் தேசிய பேரிடர் நிவாரண நிதியாக ஆயிரத்து 536 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது
5. இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை கபடிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்திய அணி, வேல்ஸ் அணியை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

சர்வதேச விண்வெளி மையத்தில் ஒன்பது மாதங்களுக்கும் மேலாக தங்கி இருந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட நான்கு விண்வெளி வீரர்கள் இன்று அதிகாலை பத்திரமாக பூமிக்கு திரும்பினர்.

இவர்களை அழைத்து வந்த ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ட்ராகன் விண்கலம், அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் உள்ள **Tallahassee** கடற்பகுதியில் வெற்றிகரமாக இறக்கப்பட்டது.

பின்னர் அந்த விண்கலம் கப்பலுக்கு கொண்டு வரப்பட்டு விண்வெளி வீரர்கள் ஒவ்வொருவராக வெளியே அழைத்துவரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து அவர்கள் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் அமெரிக்கா விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா சார்பில் கடந்த ஜூன்மாதம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

எட்டு நாட்களில் இவர்கள் பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்ட நிலையில் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக பூமிக்கு திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டது.

இதையடுத்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ட்ராகன் விண்கலம் அனுப்பப்பட்டு 286 நாட்களுக்குப் பின் இன்று அதிகாலை விண்வெளி வீரர்கள் பூமிக்கு திரும்பினர்.

விண்வெளி வீரர்களை பத்திரமாக பூமிக்கு அழைத்து வந்ததற்காக ஸ்பேஸ் எக்ஸ் குழுவினருக்கு அதன் நிறுவனர் திரு எலன் மஸ்க் நன்றி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

உலக நாடுகளில் இந்திய கலாச்சாரம் குறித்த ஆர்வம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இந்திய கலாச்சாரம் மற்றும் இசையில் அதிக ஆர்வம் கொண்ட ஜெர்மனியைச் சேர்ந்த இளம் பெண் **CassMae**-யின் பெயரை மன்கிபாத் நிகழ்ச்சியில் பிரதமர் குறிப்பிட்டதை அடுத்து அவரது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த சமூக வலைதளப்பதிவுக்கு பிரதமர் பதிலளித்துள்ளார்.

கலாச்சார பரிமாற்றத்தை இணைப்பதில் காஸ்மே போன்றவர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சிகள் வாயிலாக இந்திய பாரம்பரியத்தின் செழுமை மற்றும் பன்முகத் தன்மையை வெளிப்படுத்த இவர்கள் உதவி இருப்பதாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் தயாரிக்கப்படும் ரயில் சக்கரங்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் என ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் ரயில்வேத்துறை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், பீகார் மாநிலம் **Marhowra** ம-வில் தயாரிக்கப்படும் 100 ரயில் எஞ்ஜின்கள் விரைவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட இருப்பதாகக் கூறினார்.

இது தவிர இலங்கை, மியான்மர், பங்ளாதேஷ் போன் நாடுகளுக்கு ரயில் பெட்டிகள் ஏற்றுமதி செய்யப்பட இருப்பதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

[]<<<>>>[]

வானிலை பற்றிய துல்லியமான தகவல்களை மற்றும் முன்னெச்சரிக்கைகளை சமூக ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வானிலை ஆதிகாரிகளை மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் அறிவுறுத்தியுள்ளார்.

இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளுடன ஆய்வு செய்த அவர், நாட்டின் பல்வேறு இடங்களில் டாப்ளர் ரேடார் கருவிகளை அமைக்கும் பணி குறித்தும் கேட்டறிந்தார்.

பெங்களுரு, அகமதாபாத், ராய்ப்பூர், ராஞ்சி, குவாஹாத்தி மற்றும் அந்தமானில் டாப்ளர் ரேடார் பொருத்தும் பணியை விரைவுபடுத்துமாறும் திரு ஜிதேந்திரசிங் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வரதன் சிங் தெரிவித்துள்ளார்.

தில்லியில் நடைபெற்ற சுற்றுச்சூழல் தொடர்பான கருத்தரங்கில் பேசிய அவர், பருவநிலை மாற்றம் தொடர்பான தேசிய செயல் திட்டம், வளர்சசியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் முக்கிய அம்சமாக திகழும் என்றார்.

வேளாண்மை, நீர்வளம், சுகாதாரம், பேரிடர் மேலாண்மை, இமயமலைப் பகுதிகள் மற்றும் கடலோரப் பகுதிகளில் பருவநிலை சார்ந்த பாதிப்புகளைக் குறைக்க இந்த செயல் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருப்பதாகவும் திரு கீர்த்தி வரதன் சிங் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஆளும் திமுக அரசு முறைகேடுகளிலிருந்து  மக்களின் கவனத்தை திசை திருப்பவே தொகுதி மறுவரையறை பிரச்சினையை எழுப்பி வருவதாக மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையம் சார்பில் திருச்சி ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற கம்பராமாயண பாராயணம் நிகழ்ச்சிகளை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு ஷெகாவத், தொகுதி மறுவரையறை செய்வதால்தமிழகத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றார்.

நாட்டில் கலாச்சாரத்தையும், சுற்றுலாவையும் மேம்படுத்த பிரதமர் திரு நரேந்திரமோடி இரண்டு திட்டங்களை வகுத்திருப்பததாக அவர் கூறினர்.

இந்த திட்டங்கள் அடுத்த கடடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுரலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தாா்.

நாடு முழுவதும் சுற்றுலா கட்டமைப்புகளை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்திற்கு மாநில மற்றும் தேசிய பேரிடர் நிவாரண நிதியாக ஆயிரத்து 536 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதில் மாநில பேரிடர் நிதியின் கீழ் ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 260 கோடி ரூபாயில் இதுவரை இரண்டு தவணைகளாக தொள்ளாயிரத்து 44 கோடியே 80 லட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மேலும் தேசிய பேரிடர் நிதியிலிருந்து 276 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் சம கல்வியான மும்மொழிக் கல்வியை பயிலும் நிலை உருவாக்கப்படும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூவ வலைதளப்பதிவில், அரசு பள்ளி, தனியார் பள்ளி, ஏழை – பணக்காரர் என்ற வித்தியாசமின்றி அனைத்து குழந்தைகளுக்கும் சமமான கல்வி கிடைக்க வேண்டுமென்ற நோக்கில் பிஜேபி சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.,

இந்த இயக்கத்தில் இதுவரை 20 லட்சம் பேர் கையெழுத்திட்டிருப்பதாகவும், விரைவில் ஒரு கோடி கையெழுத்துக்கள் பெறப்படும் என்றும் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

தேனி அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி சார்பில் நாட்டு இன நாய்களின் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம் மற்றும் செல்லப்பிராணிகளின் கண்காட்சி நடைபெற்றது.

இதில் கோம்பை, ராஜபாளையம், சிப்பிப்பாறை உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட ரகங்களைச் சேர்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செல்லப்பிராணிகள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ராஜ்குமார் ) --- 45 செகண்ட்*

**[]<<<>>>[]**

உக்ரைனில் உள்ள எரிசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்துவதை 30 நாட்களுக்கு நிறுத்தி வைக்க ரஷ்யா முன் வந்துள்ளது.

**[]<<<>>>[]**

இங்கிலாந்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக நலத்திட்டங்களுக்கு செலவிடப்படும் நிதியை குறைக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

**[]<<<>>>[]**

மும்பையில் மாநில அளவிலான கலாச்சார மையம் மற்றும் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என மகாராஷ்டிரா சட்டப்பேரவையில் அம்மாநில அமைச்சர் திரு ஆஷிஸ் ஷெல்லார் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

லடாக் யூனியன் பிரதேசத்தில் சுகாதார காப்பீட்டுக்கான தங்க அட்டை திட்டம் செயல்படுத்தப்படும் என யூனியன் பிரதேச நிர்வாகம் அறிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

மதுரை மாவட்டம் கீழக்கரை கிராமத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியின்போது உயிரிழந்த மாடுபிடி வீரரின் குடும்பத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறை சார்பில் நடைபெறும் சங்கமம் நம்ம ஊரு திருவிழாவிற்கான கலைக் குழுக்கள் தேர்வு இம்மாதம் 22, 23 ஆகிய நாட்களில் நடைபெறும் என ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் டெங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் திரு பிரசாந்த் நேற்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

**[]<<<>>>[]**

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர்த்தேக்கங்களில் ஒன்றான சோழவரம் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளை ஆட்சியர் திரு பிரதாப் நேற்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை கபடிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்திய அணி 89-18 என்ற புள்ளி கணக்கில் வேல்ஸ் அணியை வென்றது.

ஆடவர் பிரிவில் இந்தியா - ஸ்காட்லாந்து இடையேயான ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

***End of News***